உ

சிவமயம்.

கணபதிதுணை.

ஸ்ரீ அத்வைதார்த்தப்பிரதீபமென்னும்

ஸ்ரீ வீ ர சே க ர மா லை.

விநாயகர்வணக்கம்.

சீரார் வனிசிழலிற் சேர்ந்த திருத்தேவி
னேரார் பதங்க ளினிதேத்த—வீரேசன்
மாலை யொருநூறு மன்னுபெரு மஞ்ஞான
மாலை யொழிக்கவரு மால்.

நூல்.

தும்பியம் முகத்து முதலவ தமியன்
றுயர் துடைத் தருளுவா னருளா
லம்பவ ளமுமுத் தழகொடு கொழிக்கு
மருமது நதிபொதி வனத்திற்
செம்புகர் முகத்தை யொழித்தருண் ஞான
தேசிக வடிவமாய்ப் போந்தே
வெம்பவ மொழித்த விரகினை மறவேன்
வீரஞா னேசதே சிகனே. 1

ஏன்றனைச் சிலவர் பேதையே யெனவு
மெண்ணிடப் பித்தனே யெனவு
முன்றனிற் புகுந்தம் முன்னுரு வாகி
யுள்ளுறு துயரையென் றொழிப்பேன்
பொன்றனி நகரி லுறைவரும் புகழும்
புறவநத் துறவுகொண் டுளத்தை
வென்றவர் பரவ வீற்றிருந் தருளும்
வீரஞா னேசதே சிகனே. 2

நல்லமு ததனை நாயினுக் களித்த
நலமென நலமிலா வெனக்கு
மெல்ல நின்னருளைப் புகட்டியென் றுயரை
மெலிதரப் புரிதலுந் தகுமோ
கொல்லினுங் கலக்க மறும்பெருங் குணத்தர்
குளிர்தரும் பொங்கருட் டவத்தால்
வெல்லுநல் லவித்தை காரெனுங் கழனி
வீரஞா னேசதே சிகனே. 3

கோடியதை நினைந்துங் கொடியதே புரிந்துங்
கொடியவ ருடனுற வாயும்
படிமிசைப் படிற னெனப்பெயர் படைத்தும்
பதமலர் பணிகிலேன் கண்டாய்
நெடியவன் பிரமன் குலிசனே முதல
நிமலநல் லமரர்க ணெருங்கி
வீடலருங் கழனி நகரினுக் கிறைவ
வீரஞா னேசதே சிகனே. 4

கண்முதற் பொறிகள் கதுவுறும் விடயக்
கடுவுற லொழித்துப்புன் கருத்தைத்
திண்மலை யெனநின் றிடப்புரிந் துனது
திருவடி யடியனென் றடைவே
ஞெண்மத கரியொ டுறவுற வமர
ரும்பல்வந் தமயநோக் குதல்போல்
வெண்முகில் வதியும் வனிவன முனிவ
வீரஞா னேசதே சிகனே. 5

எய்தவ னிருக்க வம்பைநோ குதலென்
னென்னுநற் றவருரை யகத்தே
யெய்தியுஞ் சமத்தை யெய்துறு திருத்த
லென்னெனக் கெந்தையே யருள்வாய்
செய்குன்ற மனைய மாளிகை மாட்டுச்
சீதள நிலவுல விடுங்கார்
வெய்தினை யகற்றும் வளம்பொழி கழனி
வீரஞா னேசதே சிகனே. 6

24-4

துட்டர்க ளுடன்புன் றுட்டமா நெறியிற்
றுயரெனும் பயனயின் றுழன்றே
னிட்டநல் லறிவி லென்மன மிருக்க
வின்புட னும்பநீ யருள்வாய்
மட்டவிழ் மரையி னிலையறற் றுளியை
மன்னண்ட மென்றுகண் டாமை
விட்டிடு மதுவின் றடத்தினுக் கிறைவ
வீரஞா னேசதே சிகனே. 7

கொழுந்துவிட் டெரியுந் தீவினை வனத்திற்
குலவியே மிகமிக வருந்தி
யழுந்துயர் நினது திருச்செவி சார்த்தி
யருளுநா ளென்றுகொல் லறியே
னழுந்திநற் கனிக ளரிபரித் ததன்பின்
னறலொடுஞ் சாகைமீக் கிழம்ப
விழுந்துளி யமுதஞ் சுரர்கொளுங் கழனி
வீரஞா னேசதே சிகனே. 8

ஒழித்திடத் துயரை யுன்றிருப் பதத்தை
யொழித்தொரு துணையினைக் காணேன்
சழித்தெனை விலக்கிற் கதியெனக் கெவர்கொல்
கருணையின் னிதியருள் பெரியோய்
வழுத்துத நவிர வருமகன் கொழுநன்
மடித்திடு மென்னும்வன் மொழியால்
விழித்துச்சித் தசனை யழித்தவ னளித்த
வீரஞா னேசதே சிகனே. 9

அடியருக் கரிய பணிபுரிந் தில்லே
னையநின் றிருவடி தனக்கு
மிடாற வரிய பணிபுரிந் தில்லே
னென்செய்வா னிருந்தன னறியேன்
கடிகமழ் கழனிக் கிறைவநற் குரவ
கருணையங் கடலெழு மமுதே

விடமனப் பகையை விடுத்தவர் வழுத்தும்
வீரஞ னேசதே சிகனே. 10

சுக்கில மிரத்தங் கலந்திட வுளதாந்
துயர்தருஞ் சடமதா முடலை
மக்கின மனத்தி லகமென் றினைந்து
மருவுறு நினதடி மருவேன்
பக்குவ மறிந்து நின்றிரு வடியைப்
பற்றிடப் பற்றுநா ளுளதோ
விக்கினக் கடவு ளருளுரு வான
வீரஞா.னேசதே சிகனே. 11

காரை மாநகரி னிறைவனே யென்னேன்
கருதருந் தேவிமா நகரிற்
சீரைமே வியநற் குரவரே யென்னேன்
சிக்கலுட் டேவனே யென்னேன்
காருலாம் புதிய வயற்கிறை யென்னேன்
கழனிவா ழடியரே யென்னேன்
வீரமா வருளைப் பெற்றிட லெவணம்
வீரஞா னேசதே சிகனே. 12

கங்குலும் பகலுங் கழனிய வெனவென்
கருத்தழன் மெழுகினிற் கரையா
வங்கமும் விதிர்வுற் றறல்விழி பொழிய
வரற்றிடற் குரியநா ளுளதோ
சங்கரிக் கிளைய சங்கரிப் பிரிய
சங்கர குமரசெங் கரியே
வெங்கதி யுலவும் வனிவன முனிவ
வீரஞா னேசதே சிகனே. 13

முத்திரா மேச முதல்வரின் கருணை
முதல்வருண் முதல்வரின் முளரிச்
சித்தமூ டுதித்த திருவிளை யாடற்
செய்துநீ யாவையு முடித்தே

யுத்தமக் குரவர் மகிமையை யொளிர்க்கு
முன்றிரு வடிநனி மறவேன்
வித்தகர் புகழுஞ் சமிவன முனிவ
வீரஞா னேசதே சிகனே. 14

தேசிக ரெவர்க்குந் தேசிக ரான
சிதம்பர ஞானதே சிகன்றன்
மாசறு மலரை மருவினு னினக்கு
மாசொரு சிறிதுள துரைப்பே
னேசுறு மெனையு மடிமையாய்ப் புரிந்து
மேசறு பதமளித் திலைநீ
வீசுறு திரைகள் கரிகவர் நதிய
வீரஞா னேசதே சிகனே. 15

முத்திரா மேச முதல்வனே யெனவு
முதிர்துற விறைவனே யெனவு
மத்தியை யனைய கருணைமா நிதியே
யண்ணலே யென்றுமே தினமு
மத்தனும் புகழ்வ தன்றியொன் றறியேன்
மங்கையர் மயக்கொழித் தருள்வாய்
வித்தரப் பொருளை யருடருங் குரவ
வீரஞா னேசதே சிகனே. 16

சங்கையற் றரிய நிட்டையைப் புரிந்து
சமமதை யுறினுஞ்சாத் திரத்து
டிங்கரும் பொருளை யாயினு மலதிங்
கிலங்கிழை மாதர்பா லுறினும்
பங்கய முறமு நின்பத மறக்கும்
பான்மைய னலனெனக் கருளாய்
வெங்கரி யெனச்செல் லுலவிடும் வனவ
வீரஞா னேசதே சிகனே. 17

மாதவம் புரிந்து வாழினு மலது
மங்கையர் கொங்கையூ டிழிந்தே

தீதினைப் புரிந்து வாடினு நினது
திருவடி மறவிலேன் கண்டா
யாதலி னடிய னின்னுரு வாக
வையசெய் திடல்கட னாகும்
வேதநன் முடிபை யுணர்பவர் பணியும்
வீரஞா னேசதே சிகனே. 18

அரிமுக னரியொ டயனர னருக்க
னம்பிகை முதலவோ ரொன்றைப்
பரமெனப் புகலு ஞான்றுமற் றைந்தும்
பரமல காரிய மெனவே
யுரியநற் பொருளை யெனக்கருள் புரிந்திங்
குண்மையை யுணர்த்தினை மறவேன்
விரிமது நதிக்கண் ணுறைதிருக் குரவ
வீரஞா னேசதே சிகனே. 19

முன்னநின் முளரி முன்னிட வருளி
முடிவில்பே ரின்பமியா னுறவே
பின்னரிந் நகரிற் குருபர னாகிப்
பிறங்கிடு முபநிடப் பொருளைப்
பன்னிடு நினது கருணையின் பொருட்டுப்
பண்ணுகைம் மாறெதோ வறியேன்
வின்னல வனிக ணிறைதரு வளவ
வீரஞா னேசதே சிகனே. 20

இற்குரித் திலனற் றறவொழுக் கிலன்மற்
றெதனினு மிலன்மதர் நெடுங்க
ணற்குழ லாடை தனின்மன நுழைந்தங்
கழிதரு மெளியனேற் கருளாய்
பற்குன னரிய கரியவ னிரவிற்
பணிந்திட வவர்க்கருள் புரியும்
விற்கிரி வீரக் னருடிருக் குமர
வீரஞா னேசதே சிகனே. 21

மூவ்வுல கினையுந் திரணமென் றகத்தின்
முன்னுறு மன்பனு மெனக்குந்
தவ்வெழில் கொழிக்கு மரிவைய ருருவஞ்
சதிசெய னன்றுகொல் லுரையாய்
பவ்வமின் றகல·வருந்தவ முனுற்றப்
பக்குவத் தலமெனப் புகழும்
வெவ்வழற் பெயரை யுறும்வன முனிவ
வீரஞா னேசதே சிகனே. 22

எத்தனை யெனக்கிங் கெவருரைத் திடினு
மென்மன மிலங்கிழை யவர்பான்
மெத்தவுஞ் சுழலு மெந்தையே நினது
மெய்ப்பத மறவிலேன் கண்டாய்
முத்தியென் சுதையி னத்தியி னுதித்த
முதுமதிக் கருணையி னொளியே
வித்தரப் பொருளை யருடரு மிறைவ
வீரஞா னேசதே சிகனே. 23

துயங்குவ டளக மெழிவிபுன் வதனங்
குளிர்நில வெனவிழை யரையா
னயங்கெழ வுரைத்த விரித்துனைக் குறித்தின்
னறுந்துதி புரிந்திட வருளா
யயங்கனல் வளிகம் மகியிம கிரண
னரியமா னுயிரெனு முருவ
வியன்கெழு கழனி நகர்வள ரிறைவ
வீரஞா னேசதே சிகனே. 24

மழைநுழைந் திருந்தும் பனியினி னனிநன்
முளரியென் றறலினி லிருந்து
மழைவெயிற் பொறுத்துந் தவந்தனை யாற்றி
மாதவர் வருந்தினுர் வருந்த
வுழையுற முருட்க ணொண்டொடி யவர்பா
லுழன்றனன் றமியனே னருளாய்
விழைவறு முனிவ ருறைவனி வனவ
வீரஞா னேசதே சிகனே. 25

பற்பனு மகளைக் காணுபு மாழ்கிப்
பறம்புற விரும்புறு வானே
லற்பனெவ் வணமவ் விழைவினை விடுத்துன்
னரும்பதம் பெறுவதெற் கருளாய்
நிற்பர வடியர் நினைக்குமுன் றேன்றி
நிகரரும் வரந்தருந் தகின
வெற்பருள் குமரி யருடிருக் குமர
வீரஞா னேசதே சிகனே. 26

வெஞ்சமர் கடந்த வேலினுங் கொடிய
விழியினர் தமக்குளம் வெருண்டே
யஞ்சிறை யளிக ளாடுசெங் கழுநீ
ரலங்கலாய் நின்றனை யடைந்தேன்
மஞ்செென விருண்ட குழலியர் மயக்கின்
மாசினை யறுத்தருள் புரிவாய்
விஞ்சையர் புகழுங் கழனிநன் னகர
வீரஞா னேசதே சிகனே. 27

சுக்கிர னெனினும் பற்பல பிறப்பின்
சுழற்சியிற் றேகையாற் சுழன்றுன்
வக்கிர மனத்த னாகிய வடியன்
வளம்பெற லெவ்வணம் வழங்கா
யுக்கிர வழுதி பெற்றநற் றவனி
லுயர்திருப் பணியெலா முடித்தே
வெட்கிடக் கயிலை கழனியைப் புரிந்த
வீரஞா னேசதே சிகனே. 28

எண்டிசை பரவு நின்றிரு வடியை
யெண்ணிடா தையகோ விகத்தே
பெண்டுகண் மயலிற் றுயரையே யடைந்து
பேதைய னாயினே னருளாய்
மண்டனி னரரு நாகருஞ் சுரரு
மண்டிடத் திண்டிசா முகனும்

விண்டுவும் பரவு மசியிறை நகர
வீரஞா னேசதே சிகனே. 29

கடையவர் கருதும் விடயமே கருதிக்
கடையினுங் கடையனு யினனுற்
றடையற நினது கருணையின் றுகிற்
றமியன்மற் றென்கொலோ புரிவேன்
விடையவெவ் விடத்தைக் கடந்தவர் பணியும்
வேலவற் பயந்தவ ளுயிராம்
விடையவன் குமர கழனிநன் னகர
வீரஞா னேசதே சிகனே. 30

சோப்பனந் தனையுஞ் சத்திய மெனவுஞ்
சொல்லதத் துவமசி யெனவும்
விற்பனர் சிலவர் விளம்பினு மதனை
விட்டொழி விட்டொழி யெனவே
யொப்பறும் பொருளை யுரைத்தருள் கருணை
யும்பர்க்கு மொண்ணுமோ வுரையாய்
விப்பிரர் மறைய ரெனச்சொலுங் கழனி
வீரஞா னேசதே சிகனே. 31

பக்குவச் சோம மாந்திநல் லமிர்த
பதம்பெற மறையறை தலினு
லக்கரப் பிரம மறியலெற் றினுக்கென்
றறைதரிற் பிரளயம் வரையுந்
தக்கவின் னமிர்தத் தகைமையுஞ் சிறிது
தங்கிடு மெனமலர்ந் தனைநீ
விக்கின ஹரண வேலவன் றமய
வீரஞா னேசதே சிகனே. 32

சத்தினுக் குதயஞ் சிலவரு மசத்தின்
றன்மையுள் ளதற்குச்சிற் சிலரு
நித்திய மெனவிந் நிகிலத்தை மிகவு
நிகழ்த்துவர் நீசெலா தொழிந்தே

யெத்தகை யினும்புன் மனகின துருவி
விருத்தெனு மருணனி மறவேன்
வித்தகக் கழனி நகர்வள ரிறைவ
வீரஞா னேசதே சிகனே. 33

உண்மைய தாக வுதயமு மிலைமற்
றொருவியு முதயமு மிலையாம்
வெண்மையி லெழுந்து விளங்கிடு முலகம்
விளம்பனித் தியமென லெவணந்
திண்மைய தாயெக் காலமு முளதாஞ்
சித்துநீ யெனவருள் புரிந்தாய்
வெண்மையென் றுரைக்கும் வெண்மையோன் குமா
வீரஞா னேசதே சிகனே. 34

சாங்கிய ருரைக்கும் வணம்பிர தானஞ்
சகத்தினுக் கொருமுத லெனிலோ
வீங்கிவை யாவு மாவமென் ஞேக்க
மிசைவுரு தெனவருள் புரிந்தாய்
கோங்ககில் சாந்த முதலன கொணருங்
குளிர்மது நதிப்புன லாட்டி
வேங்கட முனிவன் முதலவர் பணியும்
வீரஞா னேசதே சிகனே. 35

பகுதிசித் தினுக்குப் பயந்திட லிரண்டு
பற்றிடா போகமே யெனிலோ
தகுதிநன் மோக்க முற்றிடா மோக்கந்
தருமெனிற் போகமோ தணரும்
பகுதியின் பயன திவ்வண மாகும்
பற்றிட லற்றிடென் றறைந்தாய்
விகுதியங் குரத்தைத் தகித்தவர் வழுத்தும்
வீரஞா னேசதே சிகனே. 36

எண்ணறு முயிரின் வினையெலா முணர்ந்திங்
கிரும்பிர ளயம்வரை யிருப்பான்

கண்ணிடு நினது வீக்கண வலியைக்
கடையரோ கணிப்பவ ருரையாய்
தண்ணற வுறுநற் றடப்புனன் முழுகிச்
சயினதி வினையினைத் தணந்தே
விண்ணவ ரிறையி னருள்பெறுங் கழனி
வீரஞா னேசதே சிகனே. 37

அணுக்களிற் கிரியை பற்றினும் யோக
மவயவ மின்றியெங் ஙனமா
நுணுக்கரவ் யாப்ய விருத்திசை யோக
நுதலுவர் பொருந்துமோ வதனுற்
றுணுக்கென விடுத்துச் சுருதிசொல் வழியைத்
தொடரென வெனக்கருள் புரிந்தாய்
விணுக்கரி தாகி யெமக்கெளி தாகும்
வீரஞா னேசதே சிகனே. 38

சத்திய ஞான வனந்தமென் மறைக்குத்
தருக்கர்கள் சாற்றுவர் குணமே
மெத்தவிஞ் ஞான கனமதே யெனற்கு
விளம்புவ ரென்கொலோ வறியே
னித்திய நிமல நிட்கள மாகி
நிறைந்தொரு குறைவுமற் றறிவா
மெய்த்தவ கழனி நகரினுக் கிறைவ
வீரஞா னேசதே சிகனே. 39

கடபட முதல வுளவென நிதமுங்
காண்டலின் மெய்யெனப் புகல
விடமொரு சிறிதென் றிந்துவிற் காண
லெவ்வண மவ்வண மிதற்கும்
படர்தரு கருத லொடுமெறை யளவை
பாதக மெனவருள் புரிந்தாய்
விடதாஞ் சிகிவெம் பகையறும் வனவ
வீரஞா னேசதே சிகனே. 40

இம்பரும் பரமு மெய்யெனச் சுருதி
யியம்பலான் மெய்யெனி னிதுதான்
செம்பொருள் சிறிது மிலையெனு மறைக்குச்
செறியெதிர் மறையதே யாகிப்
பம்பிடு மெனவென் றனக்கருள் புரிந்த
பான்மையை மறப்பனோ பகராய்
வெம்புத லகற்றும் பொழிலெழு கழனி
வீரஞா னேசதே சிகனே. 41

அளவறு மறைகண் மெய்யென வுலகை
யறையினு மற்பமு மிலையென்
களவறு மறைநற் பாதக மாகுங்
கதிர்வடி வேலவ னொருவ
னளவறு மசுரர்க் கெவ்வண மவண
மறிதியென் றருள்புரிந் தனையே
விளைவுறு சாலி கழையெனுங் கழனி
வீரஞா னேசதே சிகனே. 42

கருமம்விஞ் ஞான மோக்கவே துவதாய்க்
கரைந்திடல் பொருந்திடா தீச
மருமமிற் குரைப்பல் வித்தையென் பதற்கு
மருவுபா சனைபொரு ளாகுந்
தெருமர லெவன்கொன் ஞானமே யேது
சிறிதிலை யெனவருள் புரிந்தாய்
விரமம தடைந்த வருந்தவர் வழுத்தும்
வீரஞா னேசதே சிகனே. 43

தானமே புரிந்துந் தவந்தனைப் புரிந்துந்
தவறிலா மகந்தனைப் புரிந்தும்
ஞானமே யலது கதியிலை யெனவே
நான்மறை முழங்குமென் றருளி
யீனமா முடலி லகமதி யிரிக்க
வியற்றுறுங் கருணையான் மறவேன்
வேனலே யிலையென் வனிநிறை வனவ
வீரஞா னேசதே சிகனே. 44

மறுபிறப் பறுக்கும் வள்ளலாஞ் சிவமு
மாசதொன் றின்றியே யிருப்பப்
பிறிவுறு முயிர்கள் விபுவெனப் பிதற்றும்
பெற்றியெற் றினுக்குணர்ந் திலனே
கறையறத் துறந்த துறவின ராகிக்
கழனியம் பதியினை யடைந்தே
வெறுமறி வருவ மானவர் வணங்கும்
வீரஞா னேசதே சிகனே. 45

பலவுயி ரேனு மவித்தையின் பேதம்
பற்றியிங் கொருபுடை பனலா
நலவிபுப் பான்மை யளவிலா வுயிர்க்கு
நண்ணுவ திலைகமா திகட்கோ
சொலவறுந் தகைமை பொருந்தலா லுறுமென்
சொன்மழை புன்மையேன் றுதிப்பேன்
விலகும்வெள் ளருவி மதுவெனுங் கழனி
வீரஞா னேசதே சிகனே. 46

விண்ணிப மெனனல் விபுவெனற் கல்லால்
விளிவறற் கல்லவே வேதம்
விண்ணழி விலையென் றிடல்பிர ளயத்தில்
விழுமள வெனவருள் புரிந்தாய்
விண்ணவ ருமையின் குமரனைப் பணிய
வேண்டிடும் பத்திர மீவான்
விண்ணிவர் வனிக ணிறைதரும் வனவ
வீரஞா னேசதே சிகனே. 47

சூக்குமத் தாலிங் காகுமென் றுரைப்பிற்
சொல்விடு முயிர்க்கெலாம் வினைக
டாக்குமொன் றினுக்கொன் றுதலின் விவத்தை
தங்குத லரிதென வருளித்
தேக்கியென் மனத்திற் றெருளினை யருளுந்
திருவடி கனவினு மறவேன்
வீக்கிடும் பாச மறுத்தவர் வணங்கும்
வீரஞா னேசதே சிகனே. 48

உள்ளுறு சிவம தகமென வுனலா
முரையகஞ் சிவமென வுனலோ
கள்ளமென் றுரைக்கின் மறையவ னகமாங்
கருதக மறையவ னுக
வெள்ளமெவ் வணமொண் ணுதுரை யெனவே
யென்றனக் கருள்புரிந் தனைநீ
விள்ளுதற் கரிய கழனிமா நகர்வாழ்
வீரஞா னேசதே சிகனே. 49

உடலுறை யிறையு முலகுறை யிறையு
முற்றிடும் பேதமென் றியம்பிற்
படருல கதனை யதுபுரிந் ததனிற்
பகரது வேபுகுந் ததெனு
மிடாறு சுருதி யென்கொலா மெனவே
யென்றனக் கருடரான் மறவேன்
விடலறுஞ் சுடர்க்குஞ் சுடர்தரு முருவ
வீரஞா னேசதே சிகனே. 50

சம்பந்தஞ் சிவமொ டொன்முத்தி யெனிலோ
சரியொன்று மொன்றதா யிடுமோ
செம்புந்தங் கமதாய்ச் செய்திடப் படலாற்
செறிந்துறு மெனிற்பிரிந் திடுமென்
றெம்பந்த மகற்ற வெனக்கருள் புரிந்த
தென்னெனப் புகலுவன் புகலாய்
வெம்பந்த மகன்ற மெய்த்தவர் வழுத்தும்
வீரஞா னேசதே சிகனே. 51

நால்வர்நன் மொழியு நான்மறை முடிபு
நலம்பெறு மேகமே சொலலாற்
கால்வயி னேடுஞ் சருகெனக் கலங்கிக்
கருத்தழிந் திடுதலென் னுரையாய்
சேல்வலிக் கமட வென்னிற்கண் படுக்குஞ்
சிறப்புறுங் கழனியார் கழனி
வேல்வல்ன் றமயன் றனதுரு வான
வீரஞா னேசதே சிகனே, 52

கண்மணி யனைய சங்கர முனிவன்
காட்டிய வழியினைக் கவரார்
பண்மொழி யருளும் வழியினிற் படரார்
பலர்மொழி கொள்ளும்பா மரர்க
டிண்மையென் றிவற்றை யுணர்தியென் றருளுந்
திருவருண் மறப்பனோ சிறிதும்
விண்மணி புகுத லறும்பொழிற் கழனி
வீரஞா னேசதே சிகனே. 53

ஒவ்வொரு வுடற்கு மொவ்வொரு வுயிரை
யொப்பிட றகுதியே யன்றி
மூவ்வுல கதனி லொன்றினைப் புகலின்
முற்றிடு மோதொழி லெனிலோ
செவ்விதிற் பொருந்துங் கண்ணனு முனியுஞ்
செய்திடல் காணியென் றறைந்தாய்
வெவ்வினை யகன்ற மெய்த்தவர் புகழும்
வீரஞா னேசதே சிகனே. 54

கம்பமில் லுயிரு மொன்றெனி லுலகர்
காரியம் யாவையு மறிந்தே
பம்பிடல் பொருந்து மென்றிடிற் பலவைப்
பற்றிய சங்கையே நம்பா
னம்பிலை யெனநன் மைந்தனே யென்று
நன்கினை யருள்புரிந் தனையே
விம்புநல் விமல வறிவுரு வாய
வீரஞா னேசதே சிகனே. 55

ஏகமா ஞான முதித்திடி லவித்தை
யெவர்க்குமின் றாயிடல் வேண்டு
மோககா ரியங்கண் முடிந்திடல் வேண்டு
முற்றினுங் குற்றமா மெனிலோ
ஆகமா ஞான மெவர்க்குமின் றளவு
முதித்திலை யென்றருள் புரிந்தாய்
வேகுமா வுடலை யகமென லழிக்கும்
வீரஞா னேசதே சிகனே. 56

சாங்கவு பாங்க சாதன நிறைந்த
சம்பிர தாயமுன் னவரா
மாங்குயின் மிழற்றும் வனமுறை சுகரின்
மதிப்பிதா வசிட்டரின் னவர்க்கு
மீங்கெழு ஞான முதித்திலை யென்று
லென்றனக் கெவ்வண முதிக்கும்
வேங்கட முனிவன் முதலவர் வணங்கும்
வீரஞா னேசதே சிகனே. 57

ஏசுறு நினது கனவினி லெழுந்த
விருடிய ரெவர்க்குமே மைந்தா
பேசுறு பிரம ஞானமுண் டோசொல்
பின்னரிச் சங்கையெவ் வணமா
மாசறு நினது வடிவினை யறியின்
மயக்கறு மெனவருள் புரிந்தாய்
வீசரி யரியும் பகையறும் வனவ
வீரஞா னேசதே சிகனே. 58

மூத்திரா மேச மெனும்பதம் மூன்றின்
முடிபிடை முதலது நேரே
தத்துவ மசியை யுணர்த்தலி னதனைச்
சந்ததஞ் சிந்தியென் றருளுங்
கத்தரிக் கருணை கனவினும் புகழ்வல்
கருதரு மவித்தையைக் கடப்பான்
வித்தைகற் றவர்க ளுறை திருக் கழனி
வீரஞா னேசதே சிகனே. 59

பஞ்சம பதத்தை யவித்தையி னிவர்த்தி
பகருவர் சிலவரவ் வணமே
லுஞ்சிடு புருட வருத்தமின் றுகு
மூண்மையை யுணர்முயல் விலதாஞ்
செஞ்சொனன் மறையும் வியர்த்தமா மெனவே
திருவருள் புரிந்ததுஞ் சிறிதோ
விஞ்சுறு கவின்கொள் கழனிநன் னகா
வீரஞா னேசதே சிகனே. 60

ஏகமே வாத்து விதமென மறையு
மிலங்கிடும் சுவகதா திகளை
யேகமே னூக்கு மதனினு னீயு
மேகமே யெனவெனக் கருளிச்
சோகமே கடத்துஞ் சொல்லினை யெவர்க்குஞ்
சொல்லுவன் சொன்மனங் கடந்த
வேகமே கழனி நகர்வள ரிறைவ
வீரஞா னேசதே சிகனே. 61

இவ்வுல கரும்பொய் திருசிய மாகி
யிருஞ்சட மாய்ப்பரிச் சினமாய்த்
தவ்வற விலங்குந் தகைமையாற் பழுதைச்
சக்கிரி நிகரெனத் திரமாய்ச்
செவ்விதி னருளுங் கருணையைப் புகழ்தல்
சிறிதுகொ றமியனேற் கருளாய்
வெவ்விருள் கடந்த வருந்தவர் வணங்கும்
வீரஞா னேசதே சிகனே. 62

*தெலாம் வெறும்பொய் யெதனினு னெனினிங்
கிதுவுள தாமுன மிலதாய்த்
தீதினல் விளைந்து நசித்தபின் னிலதாய்த்
திரிதலா லென்றுன துளத்தே
காதலா லுணர்தி யென்றருள் புரிந்த
கருணையைக் கனவினு மறவேன்
வீதலா முடலை வெறுத்தவர் வழுத்தும்
வீரஞா னேசதே சிகனே. 63

மித்தையென் றுரைத்த லெதுவென வினவ
மிளிர்வறு மசத்தின்வே றாகிச்
சத்தினன் னியமா யிருப்பது ஞானந்
தன்னினுற் றணர்தல்சார் வதுவுஞ்
சத்தனி லிருப்பி னபிமத முழுதுந்
தங்கின்மை யெதிர்மறை யெனவும்
வித்தையி னழியு மித்தையென் றுரைத்தாய்
வீரஞா னேசதே சிகனே. 64

சகபர முதல மரக்கரி யுறழத்
தன்னினின் றன்னிய மலவே
சுகபர வுருவந் தனதுரு வெனச்சொல்
சொல்லினை யுள்ளினி னுணர்ந்தே
னிகபர நசையை யிரித்தமெய்த் தவர்க
ளிருந்தருந் தவம்புரிந் திடவே
வெகுகுடில் விளங்குஞ் சமிவன முனிவ
வீரஞா னேசதே சிகனே. 65

சோப்பன நனவி னினைவென லாலச்
சொப்பனம் பொய்நன வலவே
சொப்பன மதன்றன் னினைவது நனவென்
சொல்லினி லென்கொலோ குறையா
மொப்பறு குமர வுரையென வினவு
முன்றிருக் கருணையான் மறவேன்
விற்பனர் புகழும் வனிவன முனிவ
வீரஞா னேசதே சிகனே. 66

திருப்பொலி யுலக மானச மலதேற்
சிந்தனை யறவுறல் வேண்டு
முருப்பொழி யுளமு முனையல திலையென்
றுண்மையை யருளினு லுரைத்தா
யிருப்பதி ரசதப் பொருப்பருந் தனுசு
மிலங்குபொன் விலங்கலா யிருந்தும்
விருப்பொடு மிறைவ னசிகவர் நகர
வீரஞா னேசதே சிகனே. 67

மானச மாயிற் சகந்தினஞ் சோய
மருவவெவ் வணமெனிற் சமமே
யானநற் சாதி யாதலி னுமென்
றருள்புரி கருணையான் மறவேன்
றுனெனும் பொருளை யறிமது முனிக்குத்
தடையற வரமெலா முதவும்
வேனில நயனப் பயமறும் வனவ
வீரஞா னேசதே சிகனே. 68

காரண மதனின் றெவ்வகை யானுங்
காரிய மனியமன் றதனற்
ருரணி நினது நினைவென நினைந்து
சந்தத மகிழென வருளுந்
தோரணை யுளத்தி னிதமுங்கொண் டாடத்
தொண்டனுக் கருள்புரிந் திடுவாய்
வீரணம் படரு மதுநதிக் கிறைவ
வீரஞா னேசதே சிகனே. 69

திரைநுரை யளவி நிகழினு மறலைத்
திரிந்தொரு திரணமு மிலைபோ
லுரையறு நாம வுருவம தெழினு
முனையல திலையென வுரைத்தாய்
மரையிலை யறலைத் தரளமென் றயிர்த்து
மடந்தைய ரடர்ந்துவெட் கிடுஞ்சீர்
விரையுறை நறவத் தடம்பொலி நகர
வீரஞா னேசதே சிகனே. 70

பொன்றனு லியற்று மகுடமே முதல
பொன்றனிற் பிரிதிலை யதுபோ
லுன்றனு லியற்று மிவ்வுரு நாம
வுலகுனை யன்றியின் றுணர்நீ
யென்றனே யருளு மருளினை மறவே
னினிதினி தென்றலை மணனை
வென்றசீ ரடிய ருறைதிருக் கழனி
வீரஞா னேசதே சிகனே. 71

நாமமொ டுருவந் தோற்றலிற் பொருளு
நாடிடிற் பேதமா மெனிலோ
சேமநன் னடனும் வேறெனச் சிறிதுஞ்
செப்பிட லில்லையே னெனவே
நீமனத் துணர்தி யென்றருள் புரிந்த
நின்மல நின்பதந் தொழுவேன்
வீமனின் வலுத்த வீரர்வாழ் கழனி
வீரஞா னேசதே சிகனே. 72

சுவருறைந் திடும்பல் லோவிய மனைத்துஞ்
சுவரெனல் சுயமதி யதுபோற்
பவமுத லான சங்கற்ப விகற்பம்
பரவடி வெனக்கண்டு பரமாந்
தவமுஞற் றெனவாண் டவரரு ளியதாற்
றவமதின் முயலெனப் புகன்றாய்
விவஸ்வதன் வணங்கு மடியவர் வணங்கும்
வீரஞா னேசதே சிகனே. 73

சத்தினைப் பிரித்து நோக்குறில் வெளிய
தாதிய தசத்ததாய்த் தயங்கு
நித்திய வறிவே நிலையது வாகு
நீயது வெனவருள் புரிந்தாய்
தத்திடுஞ் சகுலிக் கொடியற்குக் கயல்க
டண்டுளி சிதறலாற் கதியீ
வித்தர நறவத் தடம்பொலி கழனி
வீரஞா னேசதே சிகனே. 74

பொய்யையு மரிய பொய்யெனப் புகலிற்
பூதலம் பொய்யலா திலங்கு
மையவென் றிசைக்கும் வார்த்தையும் வார்த்தை
யாகுமே யதுவிவ ணிலையான்
மெய்யினின் மயக்கம் பொய்யுறி லாண்டு
மிளிர்தரு மெனவருள் புரிந்தாய்
வெய்யவ ரகன்ற சமிவன முனிவ
வீரஞா னேசதே சிகனே. 75

உலககற் பனைக்குக் காரண மவித்தை
யுரையென வவித்தைகா ரணத்தை
யிலகிடு மவித்தை காரணம் பேதக்
கெவ்வண மெனவருள் புரிந்தாய்
நலகழ னியினி னடமிடும் வாளை
நத்தினம் பகடுசென் றுழற்ற
விலகிடும் வளப்ப நிறைதரு கழனி
வீரஞா னேசதே சிகனே. 76

வித்தையின் மையினை யவித்தைய தெனவே
விளம்புவ ரின்மையா மதினின்
றித்தகை யுலக மெவ்வணந் தோற்று
மென்றெனக் கதன்வடி வருளுஞ்
சுத்தமெய்த் தவரின் றிருவடி நிழலைத்
தொடர்ந்தனு தினமுற வருளாய்
வித்துவன் மணிகள் போற்றிடுங் கழனி
வீரஞா னேசதே சிகனே. 77

ஆதியி லவித்தை யழிவினை யெவண
மையவுற் றிடுமென வினவ
வாதியின் முனமில் லாமையு மழியு
மங்ஙன மறியென வறைந்தாய்
தாதளி யெகினப் பெடையினுக் குணர்த்தித்
துயரினை யகற்றுதல் காணு
வேதியர் மகிழுஞ் சமிவன முனிவ
வீரஞா னேசதே சிகனே. 78

ஒட்டறு மகண்ட வடிவுறு விருத்தி
யுடலினுள் வெளியிலோ வுதயப்
பட்டெழு மெனிலிவ் வகண்டமா விருத்தி
படர்ந்தெழும் போதுகேள் குமர
விட்டவிவ் வெவையு மின்றெனில் வினவ
லெவ்வண மென்றருள் புரிந்தாய்
விட்டலற் பணியு மெய்த்தவர் வழுத்தும்
வீரஞா னேசதே சிகனே. 79

முற்றறி வகமென் றுற்றபின் ஞேக்கின்
முத்திடும் வாதமே முதலாங்
குற்றமுஞ் சுகத்தி னுருவதே யாகிக்
குளிர்ந்துளஞ் சாந்தியா மெனவே
கற்றவர் புகழு நற்றவ முனிவ
கடையனுக் கருள்புரிந் தனைநீ
வெற்றிலை யயிலும் பற்றிலர் வணங்கும்
வீரஞா னேசதே சிகனே. 80

தனக்குமெய்ப் பிரமம் விடயமா யிராமற்
றானதன் சான்றதா யிராமற்
றனிற்பிறி தறத்தா னுகவப் பரத்தை
யறிந்தவன் றானறிந் தவனு
மெனப்புகன் றெனையே யெனக்கருள் புரிந்தா
யென்றும்யா னினதடி மறவேன்
வினைப்பகை கடந்தோர் தமக்கரு ளிறையே
வீரஞா னேசதே சிகனே. 81

சுட்டுவான் சுட்டல் சுட்டுடன் மூன்றுந்
துதைந்திடா திருந்தபே ரொளியை
விட்டிடா தனிச மகமென நினைக்கில்
வீடுளங் கரவிளங் கனியாந்
துட்டமாந் துயர மகன்றிடு மெனவே
சொல்லிய கருணையைத் துதிப்பேன்
வெட்டமா வெளியென் னறிவுரு வான
வீரஞா னேசதே சிகனே. 82

அல்லலென் பிணியை யகற்றரு மருந்தை
யகத்தினு ளமர்ந்திடுந் தாயை
சொல்லருஞ் சுடரை யகத்தினும் புறத்துஞ்
சுகந்தருந் துரியவாழ் வதனை
பல்லுருப் படைத்தும் படைத்திடா வறிவைப்
பரையினை யறியெனப் பகர்ந்தாய்
வில்லுமிழ் மணிக டிரையெறி நதிய
வீரஞா னேசதே சிகனே. 83

செப்பருங் கருணைக் குருபரம் பரையிற்
செயலிலா திருந்தயோ கிகடா
மெப்படி யிருப்ப ரென்றுயான் வினவ
விருந்தவா றிருப்பரென் றுரைத்தா
யப்பொருண் மனதிற் கொண்டன னெனினு
மையநின் னருடரல் வேண்டும்
வெற்பினைத் துளைத்த வேலவன் றமய
வீரஞா னேசதே சிகனே. 84

பிணைப்பெரு மதியை யென்றொழித் தரிய
பேரின்ப சாகரத் தூடே
கணப்பொழு தெனினுங் குடைந்திட ரனைத்துங்
காற்றினி லிலவென விடுப்பேன்
மணப்பறை யொலியு மதுநதி யொலியு
மறையறை யொலியுமே யோங்கி
விணிற்பொலி வளப்ப நிறைதிருக் கழனி
வீரஞா னேசதே சிகனே. 85

அளவற விரிந்த பாவனை நூக்க
வையகோ சமர்த்திலை யின்னுங்
களவுறு மிவற்றைக் கற்பனை புரிந்து
கடையனே னிடருற றகுமோ
வுளமறு முனிவ ருறைதிருக் கழனி
யுயர்நக ருறையுமா தவனே
விளிவறு மமல வறிவுரு வான
வீரஞா னேசதே சிகனே. 86

ஒலியொடு விடய வனுவித்த மான
வுயர்தரு மறுவகை தமையும்
பலமுயல் வொடுநீ பழகென லன்றிப்
பயன்கரம் வரும்வரை யருள்வாய்
மலைவறக் கமல மலரென்வண் டினங்கண்
மனுங்கரு விழியினர் குடையும்
விலையறு நறவ முறைநதிக் கிறைவ
வீரஞா னேசதே சிகனே. 87

எண்ணிலா விதமென் பவையையு மிதயத்
தெழுந்திடு மகமெனு மிதையு
மண்ணலா யிருந்திங் கறிபவ னையு
மலமர லெவனென வருளுந்
தண்ணுலாங் கருணை கனவினு மறத்த
றகுங்கொலோ தளிர்நிறைந் தோங்கி
விண்ணுலாம் வனிக ணிறைவன முனிவ
வீரஞா னேசதே சிகனே. 88

செந்துகி லுடுத்துத் திரிவதே யல்லாற்
செறிதுற வொழுக்கினுற் சிறந்தே
யந்தணின் சமாதி யடைந்தனை யகமென்
றறிந்தருந் துயரொழிந் திலனே

மைந்தர்க ளிருப்ப மன்மண வாளன்
மனையினி லிருப்பமா தேவி
வெந்தணல் வெயிலிற் சாலிகார் நகர
வீரஞா னேசதே சிகனே. 89

உன்றனி லெழுந்த வறிவறி யாமை
யுன்றனு லிலங்கிட லாமற்
றொன்றினி லெழுந்த தொன்றினி லிலங்கா
துண்மையி தென்றருள் புரிந்தாய்
கன்றினை யெடுத்து விளவினை யெறிந்த
கண்ணனை யுருவினிற் கடந்தே
வென்றன நடையைப் பிடிசெலும் வனவ
வீரஞா னேசதே சிகனே. 90

பொருளொரு சிறிது மில்லையே யெனினும்
பொய்யினும் பொய்யதா மனந்தான்
மருளினைப் புரியு மென்னினு நினது
மலரடி மறப்பிலா திருப்பிற்
றெருள்கொடங் கதனைச் செயம்புரிந் திடுவன்
றெருளுற வருணனி புரிவாய்
வெருளறத் தவத்தைத் தவர்முயல் வனவ
வீரஞா னேசதே சிகனே. 91

நாயினேன் றனையும் பொருளென நாடி
நயந்தருள் புரிந்துமுன் றொடர்ந்த
தீயெலாந் தவிர்த்துத் திருக்குரு வாக்கித்
திருவடி நிழலிலே வைத்தாய்
மாயையார் மயக்க மிறந்தவ ரிருந்தே
மகிழருந் தவஞ்செய வவர்மால்
வீயுமா றருளுங் கருணையங் கடலே
வீரஞா னேசதே சிகனே. 92

மண்பய மனல மனிலமே வளிகம்
மானனன் மதிரவி யுருவாய்த்
திண்பட விருக்கு நினக்கொரு பயமுந்
திகழ்ந்திடா தெனவருள் புரிந்தா
யுண்பவர் தமக்கு முணவிடு பவர்க்கு
முயாகத் தியனுரை தால்போல்
விண்பயத் திடுஞ்சிர் வல்லப விறைவ
வீரஞா னேசதே சிகனே. 93

இல்லையென் றனினு மிவ்வுரு நாம
மிலங்குவ தென்கொலோ வறியேன்
கல்லையுங் கரைக்கும் வல்லப முடைய
கருணையங் குன்றமே கழலாய்
தொல்லைநற் சுரரின் றுயர்தொலைத் தருளுந்
தோகையின் ரூன்றலை வலத்தால்
வெல்லுறு மரிய கரிமுக னுருவ
வீரஞா னேசதே சிகனே. 94

வாசனை வயத்த னுகியென் னுருவின்
வளர்ந்தனை யுளர்ந்தனி னுணரே
னேசமு முனது திருவடி தனக்கு
நின்மல சிறிதிலே னருளா
யீசனு மரியும் பிரமனு மாகு
மிறைவநற் சோலையு ணிறைபூ
வீசுறு சுகந்தஞ் சுரர்சொளுங் கழனி
வீரஞா னேசதே சிகனே. 95

விடலருஞ் சொர்டிய வாதனை விடுத்து
வெண்மையு மின்மையாய்க் கணித்தே
யுடலினை யகமென் றிடலினை யொழித்து
வுன்னுரு வுன்னுமா றருளாய்
மடலவிழ் மரையி லெகின்வதுந் திடுதன்
மலர்மிசை கலைமக டவமார்
விடுமொளி நறவத் தடம்பொலி கழனி
வீரஞா னேசதே சிகனே. 96

என்னிடத் துலகம் யாவையுந் தோன்ற
விங்கிவற் றினிலுட னுனென்
றுன்னிடல் மிகவும் வெண்மையே யெனினு
முனதடி மறவிலேன் கண்டாய்
மின்னலை நிகர்த்த வாளைமீக் கிழம்பி
மிகுதெனங் கனிவிடுத் துடுவை
வென்னிடும் வளங்க ணிறைதிருக் கழனி
வீரஞா னேசதே சிகனே. 97

அண்டமோ ரணுமற் றணுவண்ட மாக
வதிமகத் ததிகருக் குமமாய்க்
கண்டுளங் களித்துக் களங்கமற் றிருக்கக்
கடையனுக் கென்றருள் புரிவாய்

விண்டவ ருடைய தெனவிழை வொழிந்து
வியனய னுலகம்புற் றரும்பாய்
விண்டவர் வணங்கும் விண்டரு மருக
வீரஞா னேசதே சிகனே. 98

யாவையும் பெற்றே னென்னினு மிலங்கும்
யாவினு நிறையறி வுருவாந்
தேவநின் கமல மலரடி தினமுந்
திகழென திதயமீ துறவே
யோவலில் லருளை வேண்டுவ னுளத்தை
யொழித்தரு ணிட்டையை யடைந்தே
வீவறுந் தவத்தர் நிறைவனி வனவ
வீரஞா னேசதே சிகனே. 99

நாற்றிசை புகழு நாரண போற்றி
நன்கருள் பிரமனே போற்றி
கூற்றினை யுதைத்த தாளனே போற்றி
குவலய காரணி போற்றி
சாற்றருங் கருணை வேலவ போற்றி
சமிவனந் தனிற்றவ ரோடும்
வீற்றரு ளும்பி முகவனே போற்றி
வீரஞா னேசதே சிகனே. 100

ஸ்ரீ அத்வைதார்த்தப் பிரதீபமென்னும்
ஸ்ரீவீரசேகரமாலை முற்றிற்று.

பனக வெம்பகை யின்பதி காந்தையின் பரம தந்தையின்
பந்தனன் காந்தையைத், தனிகொ ளுங்கள னின்றன யவ
வதன் றவிருயிர்தரு வன்றுவ சன்சகா,யனரு மஞ்சுத னின்சு
னின்றுணை யவளி னன்சன கன்றெழு வன்மனைச்,சனகன்பே
னி தவழ்ந்து வளர்ந்திடுஞ் சானவீ மனம் வந்து மகிழ்ந்திடே.

எவருக் கானீக் கணமுடனே யிமய மலையின் கனியகியு
மிவரு மிரத மூன்றுரு மினிய மனையு மகநூலு
மெவர்தம் மாடை யீரறுகண் ணியையும் பெயரன் றிசைமகளு
மவரை யேநந் துணையாக வறிமின் னுலகத் தறிவோரே. 2

சீரார் கழனித் திருநகரைத் தேவர்புகழ்
பாரார் கயிலையெனப் பண்ணினான்-நீராருஞ்
செஞ்சடையை நீத்த சிவஞான வீரேசன்
மஞ்சுபுகழ் கைம்மா மணி. 3